பொருள்களின் விலை உயர்வு

* 405 வினு.—திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய உணவு —வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1966-வது ஆண்டில் ரூபாய் மதிப்பை குறைத்ததினுல் விலைவாசிகள் உயர்ந்தனவா ?

(இ) எந்தெந்த பொருள்களின் விலைகள் உயர்ந்தன ?

(உ) சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

(எ) எத்தனை பேர்களின் மீது என்னென்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

(ஐ) அதனுல் பாதிக்கப்பட்டவர்கள் எவ்வளவு பேர்கள், ஜில்லாவாரியாக ?

(ஒ) விவரம் மேஜை மீது வைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) முதல் (ஒ) வரை—சபை முன் விவர அறிக்கை உ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் : விலைவாசி உயர்ந்ததற்கு இந்த நாணய மதிப்பு குறைந்தது மட்டுமல்ல. பல காரணங்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் ஒரு காரணம் உணவுப்பொருள்களை குறிப்பாக மூன்று மாதங்களுக்கு முன்னுல் வடநாட்டிலிருந்து லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சோளத்தைக் கொண்டுவந்து இருப்பில் வைத்து மக்களுக்கு வினியோகம் செய்யாமல் அவை மக்கி மண்ணுக போய் விட்டது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அதன் காரணமாக அதை விலையை உயர்த்தி விற்கக்கூடிய அளவிற்கு நிலை ஏற்பட்டுள்ளது. இது பற்றிய விவரங்களைச் சொல்வார்களா ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : It is not correct.

THIRU K. VINAYAKAM : Is it not a fact that the object of devaluation of the rupee was not to affect the internal prices but to affect only foreign exchange and external prices and how does the Minister reconcile the fact that after devaluation the prices of internal commodities have been soaring, throwing the blame on the devaluation of the rupee ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : It did affect the internal prices. We see from experience that the prices of some of the commodities have spiralled due to devaluation.

திரு. வி. கே. கோதண்டராமன் : அரிசி விலை குறைந்தால் ஏனைய இன்றியமையாப் பண்டங்களின் விலையும் குறையும் என்று எதிர்பார்த்ததைப்போல் நடக்கவில்லை. அதற்குக் காரணம் வர்த்தகர்களிடம் இருந்து ஒத்துழைப்பு கிடைக்கவில்லை என்பது. ஆகவே வர்த்தகர்கள் ஒத்துழைப்பு கிடைக்காத இந்த நிலையிலிருக்கும்போது சர்க்காரே அத்தியாவசியமான எல்லா உணவுப் பொருள்களையும் பங்கீடு செய்யக்கூடிய அளவிற்கு ஏற்றுக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : வர்த்தகர்கள் ஒத்துழைப்பு கிடைத்திருக்குமானுல் இன்னும் விலைவாசிகள் இறங்குமுகமாக ஆக பெரும் வாய்ப்பிருக்கிறது. இன்னும் அந்த நிலை இருக்கிறது. வர்த்தக சமூகத்தின் ஒத்துழைப்பு கிடைக்காவிட்டால் கனம் அங்கத்தினரின் சிபார்சின திசை வழிதான் இந்த அரசாங்கம் நோக்கிப் போக வேண்டியிருக்கும்.

உ 669–673 பக்கங்களில் இணைப்பு III-ஆக அச்சிடப்பட்டுள்ளது.